உ

பரமபதிதுணை.

பார்ஸி அதிநூதன இந்துஸ்தான்
வர்னமெட்டுகளடங்கிய

# சகுந்தலா

## சரித்திரம்

OFFICE OF THE REGISTRAR OF ...
No.
19 DEC 1924
MADRAS



மதுரை புக்ஷாப்
பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு
மு கிருஷ்ணபிள்ளையவர்கள்
வெளியிட்டது.

ரிஜிஸ்டர் காப்பிரைட்

1924

O-, 892MBD,S
N24
183687

உ

ஷண்முகன்றுணை.

பார்ஸி அதிநூதன இந்துஸ்தான்
வர்னமெட்டுகளடங்கிய

# சகுந்தலா சரித்திரம்.

## விநாயகர் துதி.

வெண்பா.

பாரு மொழிமாதர் பட்டமகிஷி யென்னும்
சகுந்தலா கதை சாற்றவே—யோகசிவ
சங்கார்தன் னன்பில்வரு தந்திமுகஜங் கரனுர்
துங்க சரணந் துணை.

## சரஸ்வதி துதி.

பாடல்

இராகம்—கேதாரம்—தாளம்—ஆதி.

பல்லவி

மோனவித்வகலைவாணி ஒளிர்
முளரிமலரின்மிசை
வளரு மமுத நய (மோ)

அநுபல்லவி

ஞானபரம்பொருளே க்யானவரமருளே
நாகரீகமானதமிழ் மேடையிலுலாவுகல (மோ

சரணம்

வேதன்மகிழுந்தேவி மேலோர்புகழ்சஞ்சீவி
விதரணமதுரித
சுகிர்தசுருணசுப (மே

நேமிமிகுவிஸ்வாசன் பூமிபாலதாசன்
போற்றினேன்ஏற்றினேன்
வாழ்த்தினேன்சீர்த்திசேர் (மேச)

## 1-வது சீன்.

தேவசபை.

# இந்திரன் தர்பார்.

பாடல்

பாரார்புகழ்ரவி என்ற மெட்டு.

கண்ணிகள்

தேவாமதியணிசிவமய சுகநிதி
தெரிசனமதுதா வா வா வா
ஆவாகனமுறும் அகிலசர்வேசா
அரவணிமகிபதன் அடியார்விஸ்வாசா
அழகார்திரு நீரணிமாதவனே
அமரர்கள்பரவிய
விமலக்ருபாகா (தே)

தேவ-விசாரணை.

பாடல்

அமலகமல என்ற மெட்டு.

கண்ணிகள்

தே — பருவமழைகள் தவறிடாது
வருணனேநீபுவியின்மீது பெய்தாயா

வருணன்—வச—தேவேந்திர பூலோகத்தினிடமாக மாத மும்மாரி இடைவிடாது பெய்து செழிப்புறச்செய்து வருகிறேன்.

தே—வச—மிகச்சந்தோஷம்,

பாடல்
ஷை மெட்டு.

கருவமீறுங் கொடியபாவிப்
பயல்களுயிரைஎமனேநீ கொய்தாயா

எம-வச—இந்திர என்னுடைய அரசுமுறை தவறாது நடத்தி வரு கின்றேன்.

தே-வச—சரி சந்தோஷம்.

பாடல்
ஷை மெட்டு.

ஓம எக்ய யாக முக்யமேநடத்த
நீயேஅக்கினி செய்தாயா

அக்-வச—இந்திராணிகேள்வனே வழுவாது என்னுடைய தொழிலை செய்து வருகிறேன்.

தே-வச—சந்தோஷம்.

பாடல்
ஷை மெட்டு.
கண்ணிகள்

பூவிலுயிர்களே தழைக்க
ஆவலுடனே வாயுதேவா
புரிந்தாயா

வாயு-வச—அமரேசா யாதொரு குறைவின்றி என்னுடைய தொழில்களை நடத்தி வருகின்றேன்.

தே-வச—சந்தோஷம்.

தேவேந்திரன் வசனம்.

திக்குப்பாலர்களே நமது சுவர்க்கலோகத்தில் ஒருநாளுமில்லாதவிபரீதங் காணப்படுகிறது.

திக்-வச—யாது விபரீதம்.

தே-வச—அகோரமான வெப்பு அதிகரித்து கற்பகத்தரு முதலான புஷ்பஜாதிகளெல்லாம் வாடியிருப்பது யாது காரணம்.

திக்-வச—அமரேசா பூலோகத்தின்கண் இமையகிரிச்சாரலில் காதி மைந்தனாகிய கௌசிகமுனிவர் செய்யக்கூடிய தபோமகிமையினால் இவ்வாறிருக்கின்றது.

தே-வச—இதற்கு யாது உபாயம்.

திக்-வச—முனீஸ்பரர்களால் இதற்கு உபாயந்தேடவேணும்.

தே-வச—வியாழபகவானே விஸ்வாமித்திருடைய தவத்தை யழிப்பதற்கு ஒரு உபாயம் அருளிச்செய்யவேணும்.

பிரஹஸ்பதி-வச—சுவர்க்காதிபனே ஆனையைப்பிடிக்கவேணுமென்றால் பெரியஅகழிவெட்டி நெட்டிப்பந்தல் பரப்பி அதின்மேல் அந்த யானைக்கு வேண்டிய இரை வைத்திருந்தால் அதைச் சாப்பிடவந்து அகழியில் விழுந்துகொள்ளும் அப்போது பிடிக்க வேணும். புலியைப் பிடிக்க வேணுமென்றால் மாமிசத்தைக் காட்டிப் பிடிக்க வேணும் ரிஷிகள் தவத்தை யழிக்கவேணுமானால் பெண்களாலழிக்கவேணும் தெரிந்து கொள்வாயாக

தே-வச—அம்பரஸ்திரிகளே பூலோகத்தின்கண் இமயமலைச்சாரலில் விஸ்வாமித்திரர் தவஞ்செய்து கொண்டிருக்கிறார் அவருடைய தவத்தை யழித்துவரக்கூடியவர்கள் யாவர் இச்சபையினிடமாகக் கூறக்கடவீர்கள்.

## மேனகை முன்னால் பாடல்.

### நீதனே கந்தநாதனே என்ற மெட்டு.

கண்ணிகள்

தேவர்கள்தொழும் பூபனே
பிரதாபனே உந்தன்
சித்தம்போல்விஸ்வாமித்திரர் தன்னிடம்
சென்றுமே அணுகி யின்றுமே
மேனியே தவமழித்துமே
வருவேன் துதித்துமே சொன்னேன்

விடையது தரவேணும் தடையில்லையிது தகதி
வேந்தனே இந்த்ராணி காந்தனே

வசனம்.

அமரேசா அந்தக் கௌசிகருடைய தவத்தை அழித்து வருகிறேன் விடைதரவேணும்.

தே-வச—மேனகா சந்தோஷம் நீ அதிசீக்கிரம் சென்று வருவாயாக.

மே-வச—போய் வருகிறேன் உத்திரவாக வேணும்.

[மேனகை செல்லுகின்றாள்]

2-வது சீன்.

இமயமலைச்சாரல்.

விஸ்வாமித்திரர் தவம் புரிந்து
கொண்டிருக்கிறார்.

மேனகா பிரவேசம்.

பஞ்சகைசே என்ற மெட்டு.
பின் வேறு மெட்டு.

கண்ணிகள்

மயூரவேல் மோகன வேலா தெய்வீக
மாமறை மூலா வைபோக
மாகிய சீலா அம்பிகை
மாதவி பாலா
மணமகழ்வொடு நல
இளகரசுடர் மிரு

ஸ்ரீலதண்டாயுதபாணி உந்தனின்
தெரிசனம்பேணி வந்தனம்
செய்தேனேநானே தேனலர்
செங்கடம்போனே
சேவடியேமணி பூமிபாலதாசன் (ம)

[இவ்விதமாகப் பாடி நடனம் செய்து கொண்டு விஸ்வாமித்திரர் சமீபமாக உலாவிக் கொண்டிருக்கும் போது மேனகையை முனிவர் நோக்கிக் காதலிக்கிறார்]

## விஸ்வாமித்திரர் விருத்தம்.

விரிகதிர் மதியம்போன்ற மென்முகமயிலே கேண்மோ
பிரமனும் படைத்திட்டானே பேருலகதனி லுன்னை
அருமையாய் மணந்துகொள்ள யானுமேயிச்சை கொண்டேன்
இருதய மகிழவேதான் இணங்குவா யழகுமானே

[இவ்விதமாகக் கௌசிகர் நெருங்குங்கால் மேனகை நோக்கி தடுத்துரைத்தல்]

## மேனகை பாடல்.

### அடுக்குமல்லிகை என்ற மெட்டு

கண்ணிகள்

தவமுனிவரே உமக்கிதுசரியா பெண்களிடத்தில்
சரசவார்த்தைகளாடவுமுறையா பூராய்
சகலபாசமும்கடந்த ஞானிநீ
மகிபதிஉம்பரினிதே புகழும் (த)

வனத்திடையென்னையணுகுதல்நெறியோ அஞ்சாமல்வந்து
வருந்தியேபுலம்பிடுவதுவெறியே இந்த
மகிதனிலுமக் கழகதாகுமோ
நிகரில்லா தருமறைகளுணர்ந்த (த)

வசனம்—முனிபுங்கவரே சகலமும் தெரிந்த தவசிரேஷ்டராயிரும் தும்பெண்களிடம் சரச வார்த்தைகளாடுகிறது நீதியாகுமா அருகில் நெருங்கி வரவேண்டாம்.

## விஸ்வாமித்திரர்பாடல்

### ராமபஜனகோரியா என்ற மெட்டு.

பல்லவி

கண்ணே தயைசெய்கு வாயே
காதலி நீயே

அநுபல்லவி

எண்ணருமடமானே இதயமகிழ்ந்துதானே
மண்ணதிலுந்தனை நாடி
வந்தேன் கொண் டாடி (க)

வசனம்—பிரியசுந்தரி நீ தயவுசெய்துஇந்தவனத்தினிடமாகஎன்னை விவாகம் செய்து கொள்வாயாக இந்த பூலோகத்தினிடமாக உன்னைக்கண்டது என்னுடைய தவமேயல்லாது வேறல்ல இன்னும் உன் மனதிளகவில்லையா காதற்கினியே யாதொரு தடையின்றி ஒரு உத்தரஞ் சொல்வாயாக.

## மேனகை பாடல்.

### அடுக்குமல்லிகை என்ற மெட்டு.

கண்ணிகள்

தேவர்புகழ் மெஞ்ஞானியாயிருந்து
முனிவரே யென்னை
மேவுதல்சரியோ சொல்வீருகந்து

சேயிழையானு மிணங்கேனிப்போது
ஞாயமாயுரைத்தேன் வையமீது (தே)

வசனம்—மாதவரே நீர் தவசிரேஷ்டராயிருந்தும் என்னைக் கருதி வருவது ஞாயமல்ல உமக்கு நான் இணங்கி வருவேனென்று எண்ண வேண்டாம் அப்பாலே சென்று விடுவீர்.

## விஸ்வாமித்திரர் பாடல்.

ராமபஜனகோரியா என்ற மெட்டு

கண்ணிகள்

மங்கையே மணம்புரிவோம்
மன மகிழ்ந்து (ம)
திங்களொளிவதனச் சேயிழையடிமானே
இங்கிதக்குயில் மொழியாளே
மை விழியாளே (ம)

## கதாசாரம்.

இந்தவிதமாகப் பலவிதத் தர்க்கமாடி கௌசிகரும் மேனகையும் காந்தர்வமணம் செய்யவும் உடனே பெண்குழந்தை பிறந்தது முனிவர் நாணமுற்று தவங் கலைந்து போய்விட்டதே என்று விசனித்து நின்றனர் மேனகையானவள் பிறந்த குழந்தையை யெடுத்து முனிவரிடங் கொடுக்க எத்தனித்து குழந்தையைப் பெற்றுக்கொள் வீரென்றாள் நீயே கொண்டு செல்வாயென்று இன்னொரு திசைக்கு தவம்புரியச் சென்றனர் அந்தக்குழந்தையை வனத்திடையே வைத்துவிட்டு மேனகை தேவலோகத்துக் கேகினள் அக்குழந்தையை சகுந்தலைப்பக்ஷி பாதுகார்த்து வந்தது கண்ணுவமுனிவர் ஆச்ரமமானதால் அவர் தெரிந்து குழந்தையை யெடுத்துக் கொண்டு போய் அத்யந்த பிரியத்துடனே சகுந்தலா என்று நாமதேயங்கூறி வளர்த்து வந்ததில் மங்கைப் பருவமடைந்து சேடியருடனே கூடி விளையாடிக்கொண்டிருந்தனள்.

## துஷ்யந்தன் தர்பார்

இராகம்—கேதாரம்பியாக்கு—தாளம்—ரூபகம்.

பல்லவி

கயிலைமாமலையி லுறையும் நாயகனே
கருணை மேவிய (க)

அநுபல்லவி

சமலநாயகனும் விமலநாரணனும்
சமயவாசவனும் தழுவுநீதமிகு (க)

சரணம்

சகலஆரணமும் சகலகோடிகளும்
புகழுமான சிவப்பிரபோதா (க)

தருமநீதிமுறை பிசகிடாதமரு
சர்வபூஜிதநேர் குருநாதா (க)

தரணியாளுநய சுகுணபோதநிதி
யருளுவாயெனது பெருமானே (க)

## தேசவிசாரணை.

இராகம்—அடாணா-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்

வேதியர் யாவரும் ஓமயாகாதிகள்
வேண்டியே செய்கின்றாரா

மந்—வச—அரசே பிராமணர்கள் வேதபாராயண யாகாதி விஷயங்களை வழுவாது செய்து வருகிறார்கள்.

## அரசன் பாடல்.

ஷை மெட்டு.

வீரதீரக்ஷத்ரியரானவர் நீதியின்
விதம் நடக்கின்றாரா

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
18358

மந்-வச—வேந்தே நமது குல க்ஷத்திரியர் குலஆசாரப்படி வில்வித்தை முதலான ஆயுதப்பரிட்சை செய்து வீரதத்துவமடைந்து கீர்த்திவாய்ந்து வருகின்றார்கள்.

அர-வச—மிகவும் சந்தோஷம்.

பாட்டல்

ஷெ மெட்டு.

கண்ணிகள்

ஜாதிவைசியர் .. நீதிகுலாசாரம்
தழுவி வருகின்றா

மந்-வச—அரசே நமது ராஜியத்திலுள்ள வணிகர்கள் அவாளவா ளாசாரம்தவறாது வியாபாரமுறையை நடத்தி வருகின்றார்கள்

பாட்டல்

சாற்றொண்ணுக்கீர்த்தி சேர்
சூத்திரர் சீர்த்தியா ய்
தகைவுற வாழ்கின்று ரா

மந்-வச—வேந்தே நமது தேசத்திலுள்ள சூத்திரர்கள் யாதொரு குறைவின்றி மகிழ்ச்சியோடு வாழ்கின்றார்கள்.

துஷ்-வச—பிரதான் மிக்க சந்தோஷம் நமது தேசத்தில் விசேடம் வேறு எதுவுமுண்டோ பகர்வீர்.

மந்-வச—இறைவனே நமது நாட்டின் பிரஜைகள் இட்ட பயிர்களை மிருகங்கள் வந்து அழிக்குதென்று ஆசாரவாசலின்கண் நேற்றையத்தினம் வந்து முறையிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

கதாசாரம்.

இவ்வாறு மந்திரி கூறவும் வேந்தனாகிய துஷ்யந்தன் வேடுவர்களை வரவழைக்கும்படி செய்து வனத்திற் சென்று வேட்டையாடி வருகின்றான்.

## பாடல்

### இங்லீஷ் நோட்டு.

கண்ணிகள்

தீரர்களேவீரர்களே சிங்கம்புலிசெந்நாய்
ஓநாய் கரடிகள் வருகுதுகொல்லுங்கள் (தீ)

பாருங்கள்காட்டானை பந்திகள்வருகுது
கொல்லுங்கள் (தீ)

பாலா அம்புகத்தியீட்டி வேலாயுதம்விற்கொண்டு
கொல்லுங்கள் (தீ)

### விஷயம்.

இவ்வாறு துஷ்யந்தன் வேட்டையாடிக் களைத்துத்தண்ணீர் தாகத்துக்குச் சாப்பிடச் செல்லுகின்றான்.

### கண்ணுவமகாரிஷி ஆசிரமம்.

## சகுந்தலா நந்தவனம்,

### சகுந்தலை பாடல்.

### பாண்டியனின்றமீனாக்ஷி என்ற மெட்டு.

கண்ணிகள்

தாண்டவம் ஆடியபாதா உந்தனின்
தரிசனந்தாதா
பூண்டரவம்புனைநாதா நித்தியம்
போற்றினேன்நீதா
புகழ்பெரும்சுபகுண
திகழுறுசிதம்பரத் (தா)

பண்டுவேதாகமமூர்த்தி தரும்பூமி
பாலகன்நேர்த்தி
பாசுரமோதினேன்சீர்த்தி கடைக்கண்
பார்த்தருள்கீர்த்தி

பகவதியுமைமகிழ்
பிரணவமுடிவினில் (தா)

## கதாசாரம்.

துஷ்யந்தன் சகுந்தலா நந்தவனத்தின் தடாகத்தில் தாகத்துக்குத் தண்ணீர் சாப்பிட்டுக் களைப்பாறி நந்தவனத்தை வருணிக்கின்றான்.

## பாட்டு

### பாததரிசனம் என்ற மெட்டு.

பல்லவி

தெய்வீகசுந்தரம் திவ்யநந்தவனம் (தெ)

அநுபல்லவி

வைபோகசிங்காரம் மங்காதகெம்பீரம் (தெ)

சரணம்

தென்றல்வந்துமெல்லமெல்லடித்திடும் விசேஷமே
செண்பகமந்தாரைரோஜாசிங்கையிற் சந்தோஷமே
நன்றுமல்லிநந்தியாவர்த்தங்களிங்கு வாசமே
நாகரீகமானசித்ரவேலையி னுல்லாசமே

நாகணவாய்ப்பக்ஷிகளின் கூட்டம் இதில்
நாற்புரமிருக்குது நீரோட்டம் வர்ன்னத்
தோகைமயிலாடிடுங்கொண்டாட்டம் அதைச்
சொல்லமுடியாதினிதார்ப்பாட்டம்

தேசுபெறுஞ்சீல ஞ்
சேரும்பூமிபா ல
தாசன்தமிழ்க்கோல ந்
தரிசனமிக்கால ம் (தெ)

## விஷயம்.

இவ்விதமாய் வருணித்து உலாவி வரும்போது சகுந்தலாவைக்கண்டு துஷ்யந்தன் வருணிக்கின்றான்.

## பாடல்

கழுகுமலைக்கினிநேராய் என்ற மெட்டு.

பல்லவி

மதனரதிக்குயில்தானோ சுப
மங்களமோகனந்
தங்கும்ரூபவதி (ம)

அநுபல்லவி

மாசில்லாரூபப் பிரகாசிவசீகா (ம)

சரணம்

மதுரிதமுத்தமிழ்ராணி விகசிததெய்வஇந்த்ராணி (ம)

மதியத்தொளிர்வதனக் கிளி
பதியிற்புகழதுபெற்றிடு (ம)

மட்டில்லாதமெட் டழகி
கஸ்தூரிப்பொட்டழகி (ம)

வன்னமயில்போலுலாவு மிம்மாது
வையகமீதிலிவட்கிணை யேது
என்னதான்சொல்லுவேனாலுமிப் போது
வாசககாரண சீல
மாகியபூமி பால
தாசனின்தமிழ்ப்பெருங்கோலஞ்
சார்ந்துறக்கண்டேன்நற் காலம் (ம)

## வசனம்.

ஆகா என்ன சிங்காரம் என்ன பிரகாசம் என்ன அழகு இவள் தேவஸ்திரியோ இந்திராணியோ ரதியோ அல்லது ஊர்வசி திலோர்த்தமை மேனகை ரம்பையெனும்படியானதேவமாதர்களில் எவளோ இவள் இன்னாரென்று தெரியவில்லை அருகிற் சென்று வினவுகின்றேன்.

## துஷ்யந்தன் சகுந்தலா அருகிற்சென்று வினவுகின்றான்.

### பாடல்

### பியாண்டு மெட்டு.

கண்ணிகள்

மங்கையேயெந்தவூர் என்னபேர்
வழுத்துவா யீக்ஷணத்தில்
இங்கிதரஞ்சித மானே
இயம்புவாயடி தேனே
என்தனியாய்வன மீதிலுலாவுகிறாய் (ம)

### வசனம்

பெண்மணி நீ யார் எந்த நகரத்திலிருப்பவள். உன்னுடைய நாமதேயமென்ன உன் மாதா பிதாவினுடைய நாமதேயம் யாது பகர்வாயாக.

[மௌனம் பாராட்டி துஷ்யந்தனை சகுந்தலா வருணிக்கின்றாள்.]

### பாடல்

### பாலாபிஷேகம் என்ற மெட்டு.

கண்ணிகள்

ஆஹா மதனசிங்காரம் மிகுந்திடும்
அற்புதலக்ஷண விக்ரமனே
மோகானுபோக வசீகர காரண
முத்தமிழ் வித்து உத்தமனே (ஆஹா)

### தொகையறு

பரதசாஸ்திரநிருதபாலாஷ்டியமகா வைபோகன்
விரதசத்யசுகிர்தமேலாகமத் தெய்வீகன்

### பாடல்

பண்சுரரஞ்சித விஞ்சையர் மகனோ
பண்டரிதன் மகன் நன்புறு குகனோ
பார்த்திட நேர்த்தியே
சீர்த்திசேர் கார்த்தீர் (ஆஹா)

## கதாசாரம்.

இவ்விதமாய் இருவரும் வருணித்து தந்தம் வரலாறு முதலானதும் தெரிந்து கொண்டு காந்தர்வவிவாகமுடித்து இருபேர்களும் சுகித்து விளையாடினபின்பு துஷ்யந்தன் சகுந்தலையை நோக்கிக் கூறுகின்றான்.

## விருத்தம்.

வேட்டைக்கி வந்தேன்பெண்ணே வினைப்பயனாலே உன்னைக்
காட்டினிற் கண்டேனெந்தன் கவலையும் விலகிப்போச்சு
கூட்டியே வந்தசேனைக் கூட்டங்க ளிருக்குதங்கே
நாட்டுக்குச் சென்றுபின்பு நான்வந்தே யழைத்துச்செல்வேன்

## வசனம்.

அருமைக்காதலியே நான் வேட்டையாடவந்தேன் தெய்வானுகூலத்தால் உன்னைக்காணும்படி நேரிட்டு காந்தர்வ விவாகமுடித்துகொண்டோம் மந்திரி முதலான சேனைகளெல்லாம் காணாமல் தேடுவார்கள் நான் நகரத்துக்குச் சென்று நாளையதினம் வந்து உன்னை அழைத்துக்கொண்டு செல்லுகிறேன் பிராணசகி.

## சகுந்தலா பாடல்.

ராமபஜனகோரியான் என்ற மெட்டு.

பல்லவி

இருந்துமே செல்வீர்நாயகா
கொஞ்சநாளினி (இ)

அநுபல்லவி

விருந்துசெய்குறேனானே வித்தகமாசீமானே
பொருந்திடுந்திவ்யபூமானே புனிதமாக (இ)

சரணம்

இன்றுதயவாகவே யிருந்துமகிழ்வாகவே
நன்றுடன்போஜனஞ்செய்வீர் நாடியேமிக (இ)

## வசனம்.

பிராணவல்லபா தயவுகூர்ந்து போஜனஞ் செய்து கொண் செல்லலாம் கொஞ்சங் கிருபை செய்யவேணும்.

[சகுந்தலையளிக்கின்ற அமுதை அன்புடன் அருந்திக்கொண்டு மறுபடி துஷ்யந்தன் விடைகேட்டனன்]

## தர்க்கம்

### பூலோகமாய்கை என்ற மெட்டு.

கண்ணிகள்

துஷ் — சேனைபடைகார்த்திருக்கும் சென்றவரைக்காணுமென்று
தேவியேநீயே சித்தம்வைப்பாயே
திருவிடைகொடடி நீயே
ஒருவிடைகொடடி
திங்களின்ப அம்லசுந்தரம் (சே)

சகுந் — சேனைகளிருந்தாலென்னசெல்லலாம்பின்புமெல்ல
திவ்யகுணாளா சேருமணாளா
திகழுமம்புயனே சுக
மகிமைரஞ்சிதனே
மங்களம்பொருந்து செங்கை (சே)

துஷ் — எந்தனகர்சென்றுவந்து உந்தனையழைத்தேகுவேன்
என்பசுந்தேனே இன்புறுமானே
இதுததிமயிலே விடை
யதுவேதாகுயிலே
எண்ணரும்பசுங் கிளியே
மின்னிடை யழகியே (சே)

சகுந் — மன்னவரேசென்றுவேறு மாதரைமணந்துகொள்வீர்
மங்கைநான்வீணே மதியொன்றுந்தோணேன்
மகத்வாஞ்சிதனே நல
சுகத்விகசிதனே
சுந்தரம்பொருந்து ரூப
சந்திரரே சரியோ (சே)

### விஷயம்.

இவ்வாறு இருவரும் சம்பாஷணை செய்துபின்பு சகுந்தலைக்கு மனச்சந்தேகம் தீரும்படி துஷ்யந்தன் சத்தியங் கூறுகின்றான்.

### விருத்தம்.

..கையேயுன்னையன்றி மற்றொரு பெண்ணை வேண்டேன்
..ங்கமேயின்றி யுந்தன் பாலனுக் கரசுதந்து
..ங்கித வுதவிசெய்வே னிதுவேசத்யம் சத்யம்
..ங்கையின் யாழிதந்தேன் ஆகாசவாணி சாக்ஷி.

[சகுந்தலை யுகந்துகொண்டாள்.]
[துஷ்யந்தன் சென்றனன்.]
[கண்ணுவமகரிஷி வந்தனர்.]

பிதாவாகிய கண்ணுவர் சகுந்தலையை ஞானதிருஷ்டியாலறிந்து யாது விஷயம் என்று வினவினர் கூறுகின்றாள்.

## சகுந்தலா அகவல்.

தந்தையேசரணம் தஞ்சமேயானும்
எந்தனின்செய்தி யியம்புவேனன்பாய்
மெய்யனேநீரும் மேவியேசென்றபின்
ஐயமில்லாமலே யாசிரமீதினில்

சித்தமுமகிழச் சேயிழையிருந்தேன்
அத்தினாபுரியை யரசுறுமன்னன்
சுந்தரமாகவே துஷ்யந்தனிங்கு
வந்திடநாடி வணங்கினேனையா

வேந்தனுமென்னை வேண்டியேயின்று
காந்தர்வம்புரியக் கருதிடவுகந்தேன்
சத்தியம்பெற்று சந்தேகமின்றி
நத்தியேயானும் நானுமேபுரிந்தேன்

வேட்டமேசெய்திட மேவியேவந்ததால்
நாட்டுக்குச்சென்று நாளையேவந்து
அழைத்துமேசெல்வதாய் அரசனுமேகினன்
வழுத்தினேனுண்மை மாசில்லாதையனே

மன்னித்துநல்ல வாக்கருள்செய்வீர்
பொன்னடிக்கபயம் பொறுத்திடவேணுமே
இதுதான்செய்தி யிமையவர்திருடி
துதிகொளுந்தவமே தூயநற்கருணை

புரிந்துமேயின்று புவியெலாம்போற்ற
சிறந்துமேகார்த்து தீவினையகற்றி
பக்ஷமாயினிதே பண்புடனென்னை
ரக்ஷிக்கவேணும் நன்மையோங்கிடவே.

## கதாசாரம்.

இவ்விதம் வணங்கி வேண்டிடக் கண்ணுவர் கருணைகூர்ந்து ஆசீர்வாதந்தந்து சந்தோஷித்தனர் சகுந்தலா கற்பவதியாகிநாயகர் வரவில்லை யென்று விசனித்துக்கொண்டிருக்கும்போது துருவாசர் வந்து ஆசிரமவாயலில்நின்று பவதி பிக்ஷாம் தேஹி யென்று மூன்று முறைகேட்டும் பதில்கிடைக்காமையினாலே ஆசிரமத்தில்யாருமிருக் கிறார்களாவென்று ஞானதிருஷ்டியால் சகுந்தலை உள்ளே யிருப் பதையறிந்து கோபமிகுந்து சாபங் கொடுக்கின்றார்.

## துருவாசர் விருத்தம்.

தாரணி புகழுகின்ற சகுந்தலை மதித்திடாமல்
காரணமுள்ள சொந்தக் கணவனின் பிரிதியாலே
யாரெனக் கருதவில்லை யவளுடநாதன் பூவில்
வாரணியிவளை யின்றே மறந்திடக் கடவதினியே

## விஷயம்.

என்றுசாபங்கொடுத்துவிட்டு வெளியில் சென்றிடவும் அநா சூயை பிரியம்வதை யென்ற இரண்டு சகிகளுக்குங் காதில்விழுந்தது அவர்கள் பயந்து ஓடிவந்து முனிவருடையபாதத்தில் அடைக்கலம் புகுந்து வேண்டிக்கொள்ள மனதிரங்கி சகுந்தலைக்கிக் கொடுத்த கணையைக்கண்டு துஷ்யந்தனுக்கு நினைவு உண்டாகுமென்று அநுக் கிரகித்து மறைந்தார் பத்துமாதஞ் சென்ற பின்பு நல்ல சுபமுகூர்த் தத்தில் ஆண்குழந்தை பிறந்தது இந்தக்குழந்தை பாதகண்டதைத் யாள்வானென்று ஞானதிருஷ்டியால் கண்ணுவர் அறிந்து பரதன் என்று நாமதேயமிட்டு ஐந்துவயதின் வரை வளர்த்து சகல கல்வி அஸ்திரவித்தையுங் கற்பித்துக்கொடுத்து ஆதரித்து வருங்கால் அரசன் வரவில்லை யென்று சகுந்தலை விசனிக்கின்றாள்.

## சகுந்தலை புலம்பல்.

இராகம்—முகாரி—தாளம்—ரூபகம்.

கண்ணிகள்

சிவனேயென் தலைவிதி யோ
சேயன் வயதைந்தாகியு ம்
நாயகன்வரவுங்காணே ன் (சி)

பவநாசனே குண பரமவிகசிதனே
பரிபூரண வரதசுகிர்தபர (சி)

## கதாசாரம்.

இவ்விதமாய்ப் புலம்பி வருந்திக்கொண்டிருக்கின்ற சகுந்தலையை நோக்கிக் கண்ணுவர்தேற்றி சகுந்தலையைக்கொண்டுபோய் விட்டு வரும்படி மாணுக்கரிடம் தெரிவித்து குழந்தையுடனே அனுப்பிவைக்க இவர்கள் அத்தினுபுரியை நாடி வந்தார்கள் துஷ்யந்தன் மந்திரி பிரதானிகளுடனே அரசு வீற்றிருக்கின்றனன்.

# அத்திஞபுரி துஷ்யந்தன் தர்பார்

## கலிலோ என்ற மெட்டு.

பல்லவி

கருணுகரசிவனருள்குமரனே
காணமயிலின்வாகனு—கார்த்திடுவாய் (க)

அநுபல்லவி

சுரர்நாரதர் மாதவர்போற்றிடுஞ்
சுகுணசரவணபவா சுகவாத (உ)

சரணம்

நயமாம்பூமிபாலதாஸ்க் கவி
நாடியேதுதிப்பவ் வே
ரஞ்சிதனே
துயர்தீர்ந்திடவள்ளி தெய்வானையுடன்
துரிதமாகவந்தருள் செய்
சுப்ரமண்ய (௩)

## கதாசாரம்.

துஷ்யந்தன் சபையில் வந்து அரசனை நோக்கி சகுந்தலை வணங்குகின்றுள்.

## சகுந்தலா பாடல்.

## ஞானமிர்தக்கடலே என்ற மெட்டு.

கண்ணிகள்

நாதா வந்தனமே
நாயகி சகுந்தலையே (நா)
நீதா மனோகரனே
நீதி வசீகரனே (ந
புத்திரனிதோ பாரும்
இத்ததி கருணைகூறும் (நா

## விஷயம்.

சகுந்தலை வணங்கவும் துருவாசர் கொடுத்த சாபத்தினுலே மறந்து துஷ்யந்தன் சினந்து கூறுகின்றுன்.

## பியாண்டு மெட்டு.

கண்ணிகள்

ஆரடி யாரடி நீ யெந்தவூரடி
அஞ்சாயல்வந்தே பணிந்தாயுகந்தே (ஆ)
கூறடிசீக்கிரம்பதில் கூசாமல்வந்தாய்
கொண்டவனுனில்லை லண்டிநீசெல்வாய் (ஆ)
சொந்தமிருந்து வந்துபாராட்டியே
எந்தன்முன்வந்து மொழிந்தாய்காட்டியே (ஆ)

கதாசாரம்.

இவ்விதமாய் துஷ்யந்தன்சினந்துகூறவும் சகுந்தலை அரசனை நோக்கி கூறுகின்ருள்.

## தர்க்கம்

இராகம்—மோகனம்—தாளம்—ரூபகம்.

கண்ணிகள்

சகு — காட்டில்வந்து காந்தர்வஞ்செய்து
நாட்டுக்குச் சென்றபின்
கூட்டிக்கொண்டு செல்கின்றேனென்றீரே
காதல்மனைவிதான் நல்ல
நீதமனைவிதான் (க)

## மாமதுரவாசனி என்ற மெட்டு

கண்ணிகள்

துஷ் — பேசிடாதுசெல்லடி பேதையேயெட்டிநில்லடி
கூசாதென்முன்னேவந்தே கேலிசெய்யுருய்
பேதையேயெட்டிச்செல்லடி (பே)

சகு — நந்தவனந்தன்னிலே நாடியநின் மங்கைதான்
ஞாயமாகக்கூறுவீர் நேருஞ்சந்தோஷமாய்
நாடியநின்மங்கை தான் (ந)

துஷ் — சீச்சீயுன்பேச்செல்லாம்செல்லாதுகைவீச்செல்லாம்
ஜெகசாலிநீயே தெரிந்தேனுன்சமத்து
செல்லாதுகைவீச்செல்லாம் (பே)

[illegible]து — தந்தஅடையாளங்கள் தாயகாஇருக்குது
சந்தேகங்கொள்ளவேண்டாம் சிந்தைமகிழவே
தாயகாஇருக்குது (ந)

## துஷ்யந்தன் விருத்தம்

[illegible]ன்னீதமாக வந்தோர் அரசனைக் கணவனென்ருய்
[illegible]ன்னிலமீது தந்த்ரம் எங்குகற்ருய் இந்த்ரஜாலம்

உன்னைநான் மணந்ததானால் உகந்ததோ ரடையாளத்தை
என்னிடந் தருவாயின்றே யிணங்குவேன் உறுதிகண்டாய்

## சகுந்தலை புலம்பல்.

இராகம்—முகாரி—தாளம்—ரூபகம்.

கண்ணிகள்

தந்த அடையாளங்காணேமே சம்போசிவமே
இந்தவிதியெனக்கு ஈசாவீதித்தாயினி
சந்த்ரசடாதரனே தாண்டவமூர்த்தியே (த)
என்னநான்செய்குவேன் எப்படியுய்குவேன்
மன்னவர்க் கென்சொல்வேன்
மாதேவனருள் தானே (த)

## கதாசாரம்.

இவ்விதமாய்ச் சிவபெருமானை தியானித்துப் புலம்பி விட்டு சகுந்தலைக்கிக் கொடுத்த கணையாழி மாலினியாற்றில் விழுந்ததை யறியாதவளாய் மனமானது வேறுபட்டு வெளியேறிவந்து ஓரிடத்தி லிருந்துகொண்டு தன்னுடைய தாய் மேனகையை நினைத்துத் தியா னிக்கின்றாள்.

## சகுந்தலா பாடல்.

வேலா நீ கெதி என்ற மெட்டு.

பல்லவி

தாயே மேனகையே
தருணம்ஓடி வருவாய்கோரினேன்

அநுபல்லவி

நாயகன்வெறுத்த தாலே
நானுய்வதெவ்விதமண் மேலே
நீயென்னைப்பைந்த தாலே
நேரில்வந்து காரிப் போது (தா)

சரணம்

சேயனோடுவருந்தி நானே
சிந்தைநொந்திருக்கின் றேனே
தாயேஉன்னைநினைத் தேனே
தயவுசெய்வாய் துயரங்கொய் வாய் (தா)

## விஷயம்.

இவ்விதமாய் நினைக்கவும் மேனகைவந்து சகுந்தலையையும் அவள் குழந்தையையும் எடுத்துக்கொண்டு அந்தரத்தில் மறைந்து விடவும் மாலினியாற்றில் செம்படவர்கள் வலைவீசி மீன்பிடிக்க ஓர் மீனை வெட்டுங்கால் அதில் துஷ்யந்தனுடைய கணையாழியிருக்க

அதை யெடுத்துக் கொண்டுபோய் ராஜா அரண்மனையில் காவலாளிகள் இவர்களைப் பிடித்து சிறையில் வைத்துவிட்டு மியை அரசனிடங் கொடுத்தார்கள் துஷ்யந்தன் மோதிரத்தை பார்த்துப் புலம்புகின்றான்.

## துஷ்யந்தன் புலம்பல்

### துலங்கிடுமீனாக்ஷி என்ற மெட்டு.

பல்லவி

அரசதின்செங்கோல்முறைபிசகேன் நானென்னசெய்வேன்
அம்புவிமீதுபாவியாகி னேன்

அநுபல்லவி

சரசியைத்தவிர்த்தேனே தனயனைவெறுத்தேனே
தையல்சண்டாளியென்று மதித்தேனே
தாவியென்றேவி சகுந்தலைமேவி
தயங்கியேமயங்கியே சஞ்சலமுற்றாளோ (அ)

எங்குதான்சென்றாளோ எங்கியேநின்றாளோ
இதயங்கலங்கி யலைகின்றாளோ
ஏதேனுந்தீதுகள் செய்திடாமாது
இன்றுதான்சென்றதோர் இடமுமறியேன் (அ

## விஷயம்.

இவ்விதமாகப் புலம்பிக்கொண்டுதேடி வரும்பொழுது ந வாசிகளினால் மேனகை எடுத்துக்கொண்டு போனதை தெரிந் தேவலோகஞ் சென்று மேனகையினுடைய எதாஸ்த்தானத்தி கண்டு தன்னுடைய மனைவியாகிய சகுந்தலையையும் தனயனையு பரதனையும் அழைத்து வந்து துஷ்யந்தன் அத்தினாபுரியை அரசு புரிந்து வந்தனன்.

## மங்களம்

ஜெயமங்களம் திலகமுத்துசாவிவித்வம் (ஜெய

நயனசோபனசுமுகசுகிர்தகுண
நடமாடிடும்நறுந்தமிழ்மண (ஜெய)

பார்ஸீ அதிநூதன இந்துஸ்தான் வர்ணமெட்டுகளடங்கிய
சகுந்தலா சரித்திரம்
ஸம்பூரணம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஆவணக் காப்பக
183687

எமது நண்பர்கள் அனைவரும் எதிர்பா...
பழனிக்ஷேத்ரம் முத்தமிழ்ச்சக்ரவர்...
ஸ்ரீமது மாம்பழக்கவிச்சிங்க நாவலரவ...
கனிஷ்ட சகோதரர் சுப்பிரமணிய ஆச்சாரியா...
குமாரர் மகா-ா-ா-ஸ்ரீ
...ம். ஆர். எஸ். வேலுச்சாமிக்கவிராயராவர்களியற்றிய
தண்டபாணி தெய்வ ரஞ்சிதமென்னும்

# பக்திரசக்கீர்த்தனம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதற்பாகம் | ... | .... | ... | ... | 0—5—0 |
| 2-ம் பாகம் | ... | ... | ... | ... | 0—5—0 |

உலகப்பிரசித்தி பெற்ற செட்டிநகர் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ
இராமசாமிக்கவிராயரவர்களியற்றிய

# புதிய பக்திரசக்கீர்த்தனம்

இதன் விலை அணா—4

பு... து!

புதிது!

...த்தியாயர்
...பிள... ...ர்களியற்றிய

# ...ரமானந்தக் கீர்த்தனம்

இதன் விலை அணா—5

...ஷியார் இயற்றிய
...ந்து தேசாபிமானிகளின்

# ...ரமணிய கீதம்

... அணா—6

...சபாரஞ்சித
...யாராவர்கள் இயற்றிய

# ...ணமிர்தம்

...லை அணா—5

...ய வேணுகானம் (அச்சில்)

**...ம். கிருஷ்ண பிள்ளை,**
பி. நா. சி பிரதர்ஸ் ஏஜண்டு,
புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.